திரு. கே. எஸ். கணபதி: தலைவரவர்களே, சிறப்பு ஊதியமானது ரூபாய் 50-லிருந்து 75-ஆக உயர்த்தப்படுமென்ற அலுவல் குறிப்பு அரசிடம் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன். அதன்படி அவர்களுக்கு அளிக்கப்படுமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: முன்னாலேயே அவர்கள் சொல்லிவிட்டார்கள்.

It is better to put a separate question to get the answer from the Minister.

THIRU K. S. GANAPATHY: Sir, there is a specific order regarding that.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: தலைவரவர்களே, 45 ரூபாய் தான் இப்போது தரப்பட்டு வருகிறது. அது உயர்த்தப்பட வேண்டும் என்ற கோரிக்கை பரிசீலனையில் இருக்கிறதா என்பதுபற்றித் தனியாகக் கேள்வி போட்டால், விவரம் அறிந்து சொல்லப்படும்.

திரு. கே. எஸ். கணபதி: தலைவரவர்களே, மன்னிக்க வேண்டும். 50 ரூபாய் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டு வருகிறது. அதை 75 ரூபாயாக உயர்த்தவேண்டுமென்று குறிப்பு உள்ளது.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: தலைவரவர்களே, 45 ரூபாய்தான் அளிக்கப்படுகிறது. 75 ரூபாய் அளிக்க வேண்டுமென்ற கோரிக்கை இருக்கலாம். இப்போது 45 ரூபாய்தான் தரப்பட்டு வருகிறது.

Teachers Serving in Harijan Welfare Schools of North Arcot District.

* 22 Q.—THIRU L. BALARAMAN: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(a) whether it is a fact that salaries of the teachers serving in Harijan Welfare Schools of North Arcot District have not been paid for the months of July and August 1973; and

(b) if so, the reasons therefor?

1974 சனவரி 21]

வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள அரிசன நலப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள்

திரு. எல். பலராமன் : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள அரிசன நலப்பள்ளிகளில் பணி புரியும் ஆசிரியர்களுக்கு 1973-ஆம் ஆண்டு, ஜுலை, ஆகஸ்டு ஆகிய மாதங்களுக் கான மாதச்சம்பளம் வழங்கப்படவில்லை என்பது உண்மையா ?

(இ) ஆமெனில், இதற்கான காரணம் யாது ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) ஆம்.

(இ) 279 ஆசிரியர்களின் தற்கால பதவிகள் மாவட்ட ஆட்சித்தலைவரால் ஏற்படுத்தப்பட்டு அரசின் அங்கீகாரம் பெறாமல் ஓராண்டு காலத்திற்கு மேல் தொடரப்பட்டன. அரிசன நல இயக்குநர் அரசு ஆணையின்றி மாவட்ட ஆட்சி தலைவர்களே நியமனம் செய்யும் பதவிகளுக்கு மட்டிலும் அவர்களே பணி நீடிப்பு உத்தரவு வழங்கலாமென்று பரிந்துரைத்தார். அரசு பரிசீலனை செய்து, மேற்படி பரிந்துரையை ஏற்க இயலாது என்று 4—9—1973-ல் ஆணை பிறப் பித்தது. எனவே இரண்டு மாதங்களுக்கு சம்பளம் வழங்கப்படவில்லை. தற்காலிக பணியிடங்கள் 1973–74-க்கும் நீடிக்கப்பட்டு 19—9—1973-ல் ஜுலை, ஆகஸ்ட் மாதச் சம்பளங்கள் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டு விட்டன.

திரு. செ. முத்துசாமி : தலைவரவர்களே, நலத் துறையிலே பணியாற்றக் கூடிய ஆசிரியப் பெருமக்களுக்கு செலக்ஷன் கிரேடு, ஆண்டு ஊதிய உயர்வு போன்றவை பல ஆண்டுகளாக சில மாவட்டங்களில் வழங்கப்படாமல் இருந்து வருகிறது. மற்ற துறைகளில் இருக்கக்கூடிய ஆசிரியர்களுக்கு விரைவில் வழங்கப்படும் நடைமுறை இருக்கிறது. அதே போன்று நலத் துறையில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு காலதாமதமாக வழங்கப்படுவது குறித்து அரசாங்கத்தின் பரிசீலனைக்கு வந்ததா ? அது குறித்து என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தலைவரவர்களே, உறுப்பினர் அவர்கள் கேள்வியிலேயே சில மாவட்டங்கள் என்று குறிப்பிட்டார்கள். முதலிலே வழங்கக் கூடாத நிலையில் இருந்தார்கள். பிறகு துறை பரிசீலனை செய்து, கல்வித் துறையில் இருப்பது போல செலக்ஷன் கிரேடு கொடுக்க வேண்டுமென்று உத்தரவு பிறப்பித்து, சில மாவட்டங்களில் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் சில மாவட்டங்களில் கொடுக்க வேண்டி யிருக்கலாம். அந்தத் தகவல் என்னிடம் இல்லை.

திரு. எல். பலராமன் : தலைவரவர்களே, நலத் துறையில் பணியாற்றும் ஆசிரியர்கள் 10 அல்லது 15 ஆண்டுகள் பணி செய்தாலும், நிரந்தரம் ஆக்கப் படுவதில்லை என்பது அரசுக்குத் தெரியுமா? அதைத் தவிர்ப்பதற்கு அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இது மூலக் கேள்விக்கு மாறான கேள்வி. தனிக் கேள்வி போடவும்.

Highways Department and Narayanaswamy Temple in Kanyakumari District.

* 23 Q.—THAVATTIRU KUNDRAKKUDI ADIGALAR : Will the Hon. the Minister for Public Works be pleased to state :

(a) whether the Narayanaswamy Temple at Mekkodu village in Kanyakumari District was demolished by the Highways Department; and

(b) if so, the reason therefor?

நெடுஞ்சாலைத் துறையும், கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள நாராயணசாமி கோயிலும்

தவத்திரு குன்றக்குடி அடிகளார் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) குமரி மாவட்டம், மேக்கோடு கிராமத்தில் நாராயணசாமி கோயில் நெடுஞ்சாலைத் துறையினரால் இடிக்கப் பெற்றதா?

(இ) ஆமெனில், காரணம் என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

Secondary Grade Posts in the Ramanathapuram Panchayat Union Elementary Schools

* 24 Q.—THIRU K. S. GANAPATHI (on behalf of THIRU M. RAJAH IYER) : Will the Hon. the Minister for Local Administration be pleased to state :

(a) the the total number of Secondary Grade posts the Ramanathapuram Panchayat Union Elementary Schools; and

(b) the number of Selection Grade posts sanctioned therefor?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS